89 A/L
பிரிவு: II
விலங்கியல் - நாகநாதன்
தாவரவியல் - குமாரன்
பௌதிகவியல் - வர்ணம்
இரசாயனவியல் -
தில்லைநாதன்
தூய - பிரயோக கணிதம் -
திரு நல்லையா
New Master
INSTITUTE
B. M. C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு - ஆக்கம் - [illegible]

மலர்:-2 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு சித்திரை மீ 19 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 றம்ழான் பிறை 03 (02-05-1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY இதழ்:15

Mon. Fri. 7-30 — 8-30
பௌதிகம்
திரு. இ. சத்தியசீலன்
★ ஒளியியல் ★
(துரித மீட்டல் வகுப்பு)
ஆரம்பமாகிவிட்டது
New Master
INSTITUTE
B M.C. Lane, JAFFNA

## கருத்துக் கலசம்

### கலை வளர்ச்சி

கலை, கலாசாரங்கள் மக்கள் வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள். ஓர் இனத்தின் சிறப்பை, பெருமையை பூர்வீகத்தை அவையே பிரதிபலிக்கின்றன. ஆகையால் அவை பேணப்பட வேண்டியவை, வளர்க்கப்பட வேண்டியவை.

தமிழ்க் கலைகள் பாரம்பரியம் மிக்கவை. பல்லாண்டு கால வரலாறும், வளமும், வளர்ச்சியும் கண்டவை. அவை பல கலைப்பட்டவை இசை, நடனம், நாடகம், நாட்டார் கலைகள் என மிகப் பலவாகப் பிரியும்.

ஈழத்தில் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் தமிழர் கலைகள் உரிய முறையில் வளர வாய்ப்பு இருக்கவில்லை. ஆட்சியில் உள்ளவர்களின் அனுசரணையும் ஆதரவும் மிகக் குறைவாகவே கிடைத்தன. கலைகள் தாமே தனித்து நின்று வளர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு மக்களையே சார்ந்திருந்தது. தமிழ்க் கலைகளைப் பூரணமாகப் பேணவும், வளர்க்கவும் முடியவில்லை. அதனால் [illegible] பல கலைகள் அருகிப் போய்விட்டன.

இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என்ற புதிய உத்வேகமும், எழுச்சியும் இப்போது மக்களிடையே, இளைஞர்களிடையே உதித்திருப்பதைக் காண்கிறோம்.

கலைகளைப் பேணுவதற்கும் வளர்ப்பதற்கும் கலைஞரை மதிக்கும், கௌரவிக்கும், பாராட்டும் பண்பு மிக அவசியம். கலைஞரை வளர்க்கும் போது கலைகள் தாமாகவே வளரும். கலைஞர் வளர்ந்தால் கலைகள் வளரும்.

இளைய தலைமுறை சார்ந்த உள்ள கலைஞர்களை, ஆற்றல் இருந்தும் அரங்கிற்கு வரமுடியாத கலைஞர்களை இனம் கண்டு அவர்களை ஊக்குவிப்பதும் கலைகளை வளர்ப்பதில் ஓர் அங்கம்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபரும், பிரபல எழுத்தாளருமான திரு கே. குணராசா அண்மையில் நடந்த கலைஞர்கள் பாராட்டு விழா ஒன்றில் பேசுகையில் கலைவளர்ச்சி குறித்துப் பிரஸ்தாபித்துள்ளார்.

இளைய தலைமுறை சார்ந்த உள்ள கலைஞர்களை அரங்கேற்றுக் கொண்டு வருவதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளார்.

இளங் கலைஞர்களை இனம் கண்டு ஊக்குவிப்பது கலை வளர்ச்சிக்கு இன்றியமையாதது. தமிழ்ப்பகுதிகள் எங்கும் அதற்கு முதலிடம் கொடுப்பதோடு, அருகிப்

(8 ஆம் பக்கம் பார்க்க)



### வெள்ளம் போல் தமிழர் கூட்டம்

நல்லூரில் நேற்று நடந்த மேதினக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மக்கள் கடல். கொழும்பில் நடக்கும் பிரதான மேதினக் கட்டங்களைத் தோற்கடிக்கும் விதத்தில் தமிழ் மக்கள் கூடித் தங்கள் எழுச்சியை எடுத்தியம்பும் கண்ணுக்கு அடங்காத காட்சி. அரசின் ஹெலித் தாக்குதலும், பொம்மர் தாக்குதலும், ஷெல் தாக்குதலும் எங்கள் உறுதியைக் குலைத்துவிட மாட்டா என்ற மன திடத்துடன் தமிழர் கூட்டம் வெள்ளம் போல் அலைமோதும் காட்சி.

(படம்: ஜெயம்)



கவலைகள் விடைக்கட்டும் மறந்துவிடு; காரியம் நடக்கட்டும் துணிந்துவிடு! என்று கூறுவது போல — தமக்குத் தனிப்பட்ட முறையில் கவலை தரும் சம்பவத்துக்கு ஆளாகிய போதிலும் — அது குறித்து ஒரு சொல் தானும் தெரிவிக்காமல் —

துணிவுடனும், எழுச்சியுடனும் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தைக் கண்டு மனம் பூரித்த நிலையில் —

தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி கிட்டு, வாகனத்தில் இருந்தவாறு கையில் ஒலிவாங்கியுடன் கம்பீரமாக மேதின உரை நிகழ்த்தும் காட்சி.

(படம்: ஜெயம்)

# தமிழ்மக்களின் எழுச்சியும், துணிவும்

## மேலோங்கிய மே விழாக்கள்

யாழ்ப்பாணம், மே. 2

நிலம், வானம், கடல் ஆகிய மும்முனைகளில் இருந்தும் தாக்கி அழிக்க அரசு முழு அளவில் முனைந்துவிட்டபோதிலும், உயிரை எந்நேரமும் பறிகொடுக்க நேரிடும் என்ற நிலையிலும், தமிழ் மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்க துணிவும், எழுச்சியும் பெற்று விட்டார்கள்.

நேற்று யாழ்ப்பாணம் குடாநாட்டில் நடந்த மேதின விழாக்கள் அதனையே பிரதிபலித்தன.

சென்றவாரம் நடந்த கொடூரமான, பயங்கரமான பொம்மர் தாக்குதல்களின் தாக்கம் தணியாத வேளையிலும், தொடர்ந்து நடந்து வரும் ஷெல், ஹெலி, பீரங்கித் தாக்குதல்களின் மத்தியிலும் மக்கள் எழுச்சியுடனும், துணிவுடனும் பெரும் எண்ணிக்கையில் மே தினப் பேரணிகள், கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

அவை தமக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது, சிறியோர் முதல் பெரியோர் வரை, பெண்களும், ஆண்களுமாக உற்சாகத்துடன் மேதின விழாக்களில் பங்குபற்றினர்.

அரசாங்கத்தின் அட்டூழியத்தையும், தமிழ் மக்களின் மன உறுதியையும் எடுத்தியம்பும் சுலோகங்கள், பதாகைகள் சகிதம் பல மைல் தூரத்துக்கு இடம்பெற்ற பேரணிகளில் மக்கள் அடிப்பு

(8ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் மாபெரும் அணி

### தமிழீழத்துக்கு அத்திவாரம்

### வானில் இருந்தவாறு கிட்டு உரை

யாழ்ப்பாணம், மே 2

நிலவிசோப இலட்சம் மக்கள் கலந்து கொண்ட இந்த மாபெரும் மே தினப் பேரணி நாளைய தமிழீழத்துக்கு அத்திவாரமாக அமைந்துள்ளது.

நல்லூரில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்டத் தளபதி திரு. கிட்டு மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டம் நடந்த மேடைக்கு வான் ஒன்றில் அழைத்து வரப்பட்ட திரு. கிட்டு வானுள் அமர்ந்தபடியே மக்களுக்கு உரையாற்றினார். மக்களைக் கண்ட பூரிப்பில் அவர் முகத்தில் மகிழ்ச்சி மலர்ந்திருந்தது.

தமக்கு எதுவுமே நடவாதது போல வழமையான மிடுக்குடன் திரு. கிட்டு கூறியதாவது:-

இன்று ஸ்ரீ லங்கா அரசு தனது நாட்டிலேயே மேதினக் கூட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் தடை விதித்துள்ளது.

எனினும் எமது மண்ணில் நாளாந்தம் நடைபெற்றுவரும் பொம்மர் தாக்குதல்களையும் ஷெல் தாக்குதல்களையும் பொருட்படுத்தாது இலட்சக்கணக்கான மக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டது பூரிப்பைத் தருகிறது. எங்களுக்கு ஊக்கத்தைத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### ஹெலி தாக்குதல்

யாழ்ப்பாணம், மே. 2

நல்லூரில் நடந்த மேதினப் பேரணியில் கலந்துகொண்டு திரும்பியவர்கள் மீது ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தியது.

இதனால் இரண்டு பொதுமக்கள் காயமடைந்தனர். வாகனம் ஒன்றும் சேதமடைந்தது.

நேற்று மாலை 2 மணி அளவில் வண்ணத்திப் பாலம் அருகே இச்சம்பவம் நடைபெற்றது.

(இ-10)

### சுபநேரம்

02-05-1987
சனிக்கிழமை
சுபநேரம்:-
3-57 முதல் 4-57 வரை
ராகுகாலம்:-
8-57முதல் 10-27வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### வான்மீது ஹெலி சூட்டது மூவர் காயம்

யாழ்ப்பாணம், மே. 2

மேதின ஊர்வலத்தில் கலந்துகொள்ள பொது மக்களை ஏற்றிவந்த வான் ஒன்றின் மீது ஹெலிக்கொப்டர் சுட்டதில் பெண் உட்பட மூவர் காயம் அடைந்தனர்.

நேற்றுக்காலை நீர்வேலியில் இச்சம்பவம் நடை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளின் மாபெரும் பேரணி

யாழ்ப்பாணம், மே 2

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாபெரும் மேதினப் பேரணி நேற்று உடுப்பிட்டியில் இருந்து நல்லூர்வரை நடைபெற்றது.

இலட்சக் கணக்கான மக்கள் நேற்றைய மேதினப் பேரணியில் கலந்து கொண்டனர்.

காலை 9 மணிக்கு உரும்பராய் சந்தியில் உள்ள சிவகுமாரன் சிலை அருகே இருந்து பேரணி ஆரம்பமானது. பலாலி வீதியூடாக வந்து சந்தைமடம் அரசடி வீதியூடாக நல்லூரை பேரணி அடைந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட பாதகை பேரணியின் முன்னே எடுத்துவரப்பட்டது

பேரணியின் முடிவில் நல்லூர் வடக்குப் பக்கமாக அமைக்கப்பட்ட ஐந்தடி உயரமான அலங்கார மேடையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் முதலாவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பிரபாகரன் நன்றி

யாழ்ப்பாணம், மே. 2

தமிழீழ விடுதலைப் புலிகளின் மேதின ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்து கொண்ட மக்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் நன்றி தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் என்றுமே கண்டிராத இம்மாபெரும் மக்களின் எழுச்சி தமிழீழப் போராட்டத்தில் நீங்கள் கொண்டுள்ள

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஜே ஆர். தெரிவித்த கருத்துக்கு இந்தியா கண்டனம்

புதுடில்லி, மே 2

இலங்கை ஜனாதிபதி இந்தியா குறித்துத் தெரிவித்த கருத்துக்கு, இந்தியா மிகவும் கண்டனமாகக் கண்டித்துள்ளது.

இலங்கை சம்பந்தமாக இந்தியா கடைப்பிடிக்கும் கொள்கை மிகவும் நேர்மையற்றது என்று திரு. ஜெயவர்த்தனா தெரிவித்திருப்பதை இந்தியா ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. கே பி எஸ். மேனன், இலங்கைத் தூதுவர் திரு. பேர்னாட் திலகரத்தினாவை அழைத்து அரசாங்கத்தின் கடும் கண்டனத்தைத் தெரிவித்தார்.

திரு. மேனன் இலங்கைத் தூதுவரிடம் மேலும் தெரிவித்ததாவது!

திரு ஜெயவர்த்தனாவின் அவ்வாறான சொற்பிரயோகத்தை இந்தியா முற்றாக நிராகரிக்கிறது. வன்மையாகக் கண்டிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத் தமிழரின் ஒத்துழைப்பின்றி விடுதலை முழுமையாகாது

### ஈழவர் முன்னணி கூட்டத்தில் மரா

சுன்னாகம், மே. 2

மலையக தமிழ் மக்களின் ஒத்துழைப்பின்றி தமிழீழ விடுதலை முழுமையாகாது. வடக்கு, கிழக்கு மக்கள் மலையக மக்களுடன் இணைந்து போராடுவதன் மூலம்தான் இலங்கையின் இனவாத ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் நாம் வெற்றி காணுவது சாத்தியம்.

ஈழவர் முன்னணி நடத்திய மேதினப் பேரணியின் முடிவில் நடந்த கூட்டத்தில் பேசிய யாழ் மாவட்ட ஈ பேரா ஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)



ஈழவர் முன்னணி நேற்று நடத்திய மே தினப் பேரணியில் சென்ற அலங்கார ஊர்திகளில் ஒன்றையும் - அதில் தேயிலை கொய்யும் பெண் தொழிலாளியும் ஏனைய தொழிலாளர்களும் நிற்பதையும் - பேரணியில் கலந்து கொண்ட யுவதிகள், இளைஞர்களில் ஒரு பகுதியினரையும் மேலே உள்ள படங்களில் காணலாம்.

(படம்: [illegible])

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் மூன்று

'திரேசா உம் மூலமாகத் தனக்குப் பிறந்த குழந்தைக்குப் பராமரிப்புத் தொகை கோரி வழக்குப் போடப் போவதாகச் சொன்னுள். அதற்கு முன்னர் கடைசி முயற்சியாக என்னிடம் வந்திருக்கிருள்'—திரேசாவின் நன்மையைக் கருதி நான் துணிந்து இப்படி ஒரு பொய்யைச் சொன்னேன்.

அந்தப் பொய் அவனில் வேலை செய்யத் தொடங்கியிருக்க வேண்டும். அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவே அவனுக்கு நீண்ட நேரமெடுத்தது.

'அவள் ஒரு விபச்சாரி. அவளிடம் பலர் போவார்கள். அவர்களில் நானும் ஒருவனுக இருக்கலாம். அதற்குப் போய் நான் மட்டும் எப்படி முழுப் பொறுப்பையும் எடுக்க முடியும்?' எனக் கண்கலங்கக் கூறினுன்.

சிவபலான அந்த நேரத்திலே கூட அவனது பேச்சைக் கேட்க எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. அதை வெளிக்காட்டாமல் சாந்தமாகச் சொன்னேன்

'அதையெல்லாம் நீர் கோர்ட்டிலே சொல்லலாம்தானே'

'மிஸ்டர் நடா, வீணாக என் ஆத்திரத்தைக் கிளறுதையும்'

'வீணாக ஒரு பெண் மீது பழி சுமத்தக் கூடாது. அவள் விபச்சாரி என்றுல் நீர் மட்டும் என்னவாம்!'

இதைக் கேட்டதும் அவனுக்கு மேலும் ஆத்திரம் வந்தது 'போயும் போயும் ஒரு நடத்தை கெட்டவளுக்குப் பரிந்து பேச வந்திருக்கிறீரே' என்று கொதித்தான்.

'என்ன நீரா இப்படிப் பேசுகிறீர்!' என்றவன் 'புது வாழ்வுப் பயணம்' என்ற அவனது நூலின் அந்தரங்கப் கதையை ஆதாரம் காட்டி அவனை மடக்க எண்ணி னேன்

'மாசியால் விளைவைத் திருப்திப்படுத்த முடியவில்லை - அவளது உணர்ச்சிகளுக்கு மதிப்பளிக்க முடியவில்லை - இப்படிக் காரணங்களைக் காட்டி வீணா விமலாவோடு ஓடியதற்கு நியாயம் கற்பித்தவரல்லவா நீர்! இப்பொழுது திரேசாவை மட்டும் பழிப்பது ஏன்? கணவனை விட்டே ஓடியவளிட கணவனுடைய சுகத்தையே நீண்ட காலமாகத் துறந்திருந்தவள். பின்னர் உம்மால் நெறி தவறியதை எந்த விதத்தில் தவறென்கிறீர். திரேசாவை நாங்கள் பழித்தாலும் நீர் பழிக்கக் கூடாது. அதற்கு உமக்குத் தகுதியோ உரிமையோ கிடையாது'

'அது கதை. இது வாழ்க்கை. கதையையும் வாழ்க்கையையும் ஒன்றுபடுத்திக் குழப்பாதையும்'

கதைதான் வாழ்க்கை, வாழ்க்கைதான் கதை. உள்ளதை உள்ளவாறு எழுதுவதுதான் உண்மையான இலக்கியம் என்பதுதானே உமது கொள்கை'

'அதெல்லாம் இருக்கட்டும். முடிவாக என்ன சொல்லுகிறீர்?'

'நான் என்ன சொல்லுவது? நீரல்லவா சொல்லவேணும். திரேசாவுக்கு மாதம்தோறும் தொடர்ந்து பண உதவி செய்து வரவேண்டும். செய்வீரா?'

'அதெப்படி என்னுல் முடியும்?' என்றவன் பின்னர் 'அப்படி உதவி செய்வதே என்னைக் காட்டிக் கொடுப்பதாகாதா? அவளுக்கும் எனக்கும் ஏதோ தொடர்பு இருப்பது போலவும், அதை உறுதிப்படுத்துவது போலவுமல்லவா இருக்கும்?' என்ருன்.

'இப்பொழுது மட்டும் என்னவாம்? அப்படியானுல் 'எதுவும் செய்ய முடியாதாம் - நீ செய்வதைச் செய்' என்று திரேசாவுக்குக் கடிதம் எழுதிப் போடவா?'

'உமக்கேன் இந்த வேலையெல்லாம்? இதெல்லாம் எனது தனிப்பட்ட சொந்த விசயம். தயவு செய்து இதிலெல்லாம் நீர் தலையிட வேண்டாம்' என்று கடுமையாகச் சொன்னுர்.

திரேசா என்னிடம் வந்ததிலிருந்து - நான் உம்மிடம் வந்தது வரை இது தனிப்பட்ட ஒருவரின் விவகாரமாகவா உமக்குத் தெரிகிறது? நான் கடிதம் எழுதாவிட்டால் திரேசா மீண்டும் என்னிடம் வந்துவிடுவாள்' நானும் கடுமையாகச் சொன்னேன்.

'அப்படியானுல் என்ன செய்வது? என்ன செய்வோம்?' அவன் தீவிரமாக யோசித்தான். சில விநாடிகள் மௌனத்தின் பின் நிதானமாகச் சொன்னுன். 'வழக்குப் போடுவது பற்றி உம்மிடம் வேறு என்ன சொன்னுள்? அதற்கு ஏதாவது ஆதாரம் வைத்திருப்பதாகச் சொன்னுளா?'

அவனை வழிக்குக் கொண்டு வருவதற்கு அதுதான் வழி என்று உணர்ந்த நான் சொன்னேன்.

'அவள் அந்த உறவை வெளிப்படுத்த குழந்தை ஒன்றே போதும், வேறு ஆதாரங்கள் வேண்டியதில்லை என்கிருள்' தொடர்ந்து எனது சொந்தக் கருத்தையும் வெளியிடுவதுபோல் பின்வருமாறு சொன்னேன். "உந்தே வழக்கால் அவளுக்கு நீதி கிடைக்கிறதோ என்னவோ ஆனுல் நீர் நீதிபதியால் எச்சரிக்கை செய்யப்படுவது நிச்சயம். நீதிமன்றத்திலே பலர் முன்னிலையிலே அவமானப்பட நேரலாம். பத்திரிகைகளிலே பலரும் பார்த்துப் பழிக்கும் வகையில் செய்திகள் வரலாம்'

'அதைத் தடுக்கவேண்டும்' அவன் உறுதியாகச் சொன்னுன்.

'அப்படியானுல் திரேசாவுக்கு உதவி செய்யச் சம்மதம் என்கிறீர்...'

'அதுமட்டும் முடியாது. நீர் என்ன செய்வீர்?'

'வேறென்ன செய்ய முடியும்? முடியாதாம்' என்று அவளுக்குக் கடிதம் எழுதி போடுகிறேன்'

'ஒன்று செய்யுமேன்... அந்தக் கடிதத்தைத் தயவு செய்து நான் சொல்லுவதுபோல எழுதிப் போடுமேன்...'

எனக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

'எனக்குக் கடிதம் எழுத நீர் பழக்குவதா? நானும் ஓர் எழுத்தாளன் என்பது நினைவிருக்கட்டும்... அதுவும் நீர் மதிப்புரை எழுதித் தருமாறு கேட்கும் அளவுக்குப்பெரிய...'

அவனின் பதிலுக்குக் காத்திராமல் வீட்டுக்கு வந்து விட்டேன். வந்ததும் முதல் காரியமாக விவேகச்சந்திரனின் தெளிவற்ற நிலையை விளக்கி திரேசாவுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதனை உடனே தபாலிலும் சேர்த்துவிட்டேன்.

நாம் எதிர்பார்த்திருக்கவில்லை, இரண்டாவது தடவையாக திரேசாவும் பிள்ளைகளும் எனது இல்லத்துக்கு வந்திருந்தார்கள்.

சென்றமுறை அவர்கள் வந்து போனதை அறிந்த எனது 'நலன் விரும்பிகள்' பலர் என்மீது சீறி விழுந்தார்கள் விவேகச்சந்திரனும் அவனது நண்பர்களும் எதற்கும் அஞ்சாதவர்கள் எதையும் செய்யக்கூடியவர்கள்' என்றும், 'சிவப்பு விளக்கு விவகாரங்களில் எல்லாம் தலையிடுவது கௌரவக் குறைவு' என்றும் எனக்குப் பலத்த எச்சரிக்கைகள் செய்தனர். இனிமேல் அந்தத் 'தோறை' வந்தால் தாங்களே அவளுக்குச் சரியான பாடம் படிப்பிக்கப் போவதாகவும் சொன்னுர்கள். இதையெல்லாம் நினைத்துப் பார்த்தவாறு ஆச்சரியத்தோடு திரேசாவைக் கேட்டேன்.

'எனது கடிதம் கிடைத்ததா?'

'கிடைத்தது அதற்கு நன்றி சொல்லத்தான் வந்திருக்கிறோம்' அவள் என்ன, என்னைக் கேலி செய்கிருளா?

'என்ன சொல்லுகிறீர்கள்? அவர் உங்களுக்கு உதவி செய்கிறமாதிரித் தெரியவில்லை என்பதைத் தானே கடிதத்தில் எழுதியிருந்தேன்'

'அவர் அப்படி உங்களுக்குச் சொல்லியிருக்கலாம் ஆனுலும் நீங்கள் அவரை நன்றுக அச்சுறுத்தியிருக்கிறீர்கள் போலிருக்கிறது உங்கள் கடிதம் கிடைத்த அன்றே அவர் என்னிடம் வந்து மன்னிப்புக்கேட்டார் வரும் போது குழந்தைக்கு பிஸ்கட் பெட்டிகளும் எங்கள் பராமரிப்புக்காகப் பணமும் கொண்டு வந்தார். தொடர்ந்து நேற்றுக்கூட வந்து ஒரு தொகைப் பணம் தந்து, இனியும் அப்படியே உதவப் போவதாகச் சத்தியம் செய்திருக்கிருர்'

திரேசாவுக்கு நன்றிப் பெருக்கால் கண்கள் கலங்கின என்னுல் ஆச்சரியம் தாங்கமுடியவில்லை அவளே தொடர்ந்து சொன்னுள்

**ஒரு மாதக் குறுநாவல்**

'இதெல்லாம் நீங்கள் தந்த பிச்சைதான். இந்த உதவியை நாங்கள் என்றும் மறக்கமாட்டோம்'

திரேசா தனது பிரச்சினைகளுக்கு முடிவு கண்டு விட்ட மகிழ்ச்சியில், எங்கள் குடும்பத்தைப் பற்றி அன்று முதன்முதலாக விசாரித்தாள்.

'இவரைக் கணவராகப் பெற்ற நீங்கள் பாக்கியசாலிதான்' என்றவாறு எனது மனைவியிடம் வலியச் சென்று பேசக்கொடுத்தாள்.

'போயும் போயும் இவளா எனக்கு நற்சான்றுப்பத்திரம் வழங்குவது' என்ற பாவனையில் என் மனைவி எங்கள் இருவரையும் முறைத்துப் பார்த்தாள். அவள் வாய் திறக்குமுன் முன்னெச்சரிக்கையாக நான் சொன்னேன்.

'இவளை மனைவியாகப் பெற்ற நான் மட்டும் என்னவாம்?'

யாழ்ப்பாணம் ஆசி[illegible]வர் மருத்துவமனையில் நான் சேர்க்கப்பட்டு ஒரு வாரமாகிறது. தலையில் பெரிய கட்டுடன் 'இழைகள் அவிழ்க்கப்படும்' நாளுக்காகக் காத்திருந்தேன்.

அன்று இரவு பதினெரு மணியிருக்கும், நல்ல இருட்டு யாழ்ப்பாணத்திலிருந்து கடைசி பஸ்ஸில் வந்து மானிப்பாயில் இறங்கி எனது கிராமத்துக்கு நடந்துகொண்டிருக்கையில்தான் அந்தச் சம்பவம் நடந்தது ஒழுங்கையில் ஒரு திருப்பத்தில் திரும்பி நடந்து கொண்டிருக்கையில் இனந்தெரியாத ஒருவனின் தாக்குதலுக்கு உள்ளானேன். 'ஐயோ' என அலறியதுதான் தெரியும் அடுத்த விநாடி என்ன நடந்ததென்பதே தெரியாது கண் விழித்துப் பார்த்தபோது இங்கே கட்டிலில் கிடத்தப்பட்டிருப்பது தெரிந்தது.

'எனக்கும் பகைவர்கள் இருப்பார்களா!' என்னுல் நினைத்துப் பார்க்க முடியவில்லை. 'யாரையோ நினைத்துத் தவறுதலாக என்னைத் தாக்கிவிட்டார்கள்' - இப்படித்தான் என்னுல் எண்ண முடிந்தது.

'என்னைத் தாக்கிய அந்த நபர் அல்லது நபர்கள் யாராயிருக்கலாம்!' ஆஸ்பத்திரி விசாரணையில் என்னுல் அதற்குப் பதில் சொல்ல முடியவில்லை

சிந்தனை வசப்பட்டிருந்த நான் விசும்பல் ஒலி கேட்டுத் திரும்பினேன் கட்டிலருகே திரேசா கண்ணீர் சிந்தியவாறு நின்றுள் அவளது இடுப்பில் அனிற்ருேபா, பக்கத்தில் வனிதா- அவளும் கவலையோடுதான் நின்றுள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. 'நீங்களா? ஏன் வந்தீர்கள் இங்கே? எப்படித் தெரிந்தது இதெல்லாம்...?' தடுமாறியவாறே கேட்டேன்.

திரேசா அழுதவாறே சொன்னுள். 'என்னுல் தானே உங்களுக்கு இந்த கஷ்டமெல்லாம்... நாங்கள் இன்று காலை உங்கள் வீட்டுக்குப் போயிருந்தோம்...'

'ஏன் போனீர்கள்?'

(வளரும்)

## உண்மைச் சுதந்திரம் உள்ளவன்?

மன்மதருஜ் என்ற ஒரு அரசன் வடதேசத்தில் ஒரு சிறிய நாட்டை அரசாண்டு வந்தான் ஆறடி உயரத்தில் பார்க்க அழகான தோற்றத்துடன் இருந்த அவனுக்கு தனது அழகைப் பற்றிய பெருமையுண்டு. ஒரு நாள் தன்னை நன்ருக அலங்கரித்துக் கொண்டு நிலைக்கண்ணுடிக்கு முன்னுல் நின்றுன் அவனுடைய மனைவி பட்டத்துராணி அருகில் வந்து நின்றுள்.

'உண்மையைச் சொல்லு அண்டைய தேசத்து அரசன் என்னை விட அழகன் என்று சொல்லுகிறர்களே நீ என்ன நினைக்கிருய்' என்று கேட்டான். அதற்குப் பட்டத்துராணி 'நான் அவரைச் சுயம்வரத்தில் பார்த்திருக்கிறேன். இருந்தாலும் உங்களுக்கு எதிரில் அவர் நிற்கக்கூட முடியாது' என்ருள். அரசன் மிக்க மகிழ்ச்சி அடைந்தான்.

பிறகு உல்லாசப்பயணம் போகும்போது அவனுடைய ஆசைநாயகி வந்தாள். அரசனுக்குத் தனது மனைவி சொன்னதை அப்படியே நம்பிவிட விருப்பமில்லை. ஆகவே ஆசைநாயகியிடம் 'அண்டை தேசத்து அரசனை நீ பார்த்திருக்கிருயா? அவன் என்னை விட அழகானவனு?' என்றுகேட்டான் அவள் ஒருகணம் பயத்துடன் யோசித்துச் சொன்னுள். 'அரசே உங்களைத் தவிர நான் வேறுயாரையும் பார்த்து ஆசைப்பட்டதில்லை எனது தோழி ஒருத்தி அந்த அரசனுடன் ஆசைநாயகியாக இருந்தவள். அவள் சொல்லக்கேட்டிருக்கிறேன். உங்கள் அழகிற்கு முன் அவன் நிற்கவே முடியாது' என்ருள்.

மறுநாள் அரசன் தனது பிரதம அமைச்சரிடம் இதைப்பற்றிக் கேட்டான். 'அரசே! அழகிலும் கம்பீரத்திலும் உங்களுக்கு நிகர் நீங்களே தான். மற்ற அரசனை உங்களோடு ஒப்பிடவே முடியாது' என்ருர் அவர் அரசனுக்கு அப்போதும் திருப்தி ஏற்படவில்லை. மாறுவேடம் அணிந்து வெளியே போனுன். அந்த ஊரின் மிகச் சிறந்த எழுத்தாளரின் வீட்டுக்குப்போய் அவரிடம் இதே கேள்வியைக் கேட்டான்.

'நீ யார் என்று எனக்குத் தெரியாது. ஆனுல் அரசனே என்னைக் கேட்டாலும் இதே பதிலைத்தான் சொல்லுவேன் இந்தநாட்டு அரசன் மன்மதருஜைக் காட்டிலும் அண்டை தேசத்து அரசன் அழகிலும், பண்பிலும், அறிவிலும்கூட மிக உயர்ந்தவன் இதைச் சொன்னுல் அரசன் எனக்குச் சன்மானம் தரமாட்டான். இருந்தாலும் இதைச்சொல்ல நான் தயங்கமாட்டேன்' என்ருர் அந்த எழுத்தாளர்.

அன்று இரவு அரசன் அரண்மனைக்குத் திரும்பி வெகுநேரம் தூங்காமல் இருந்தான். எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துவிட்டு தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான் 'என் மனைவி கற்புமிக்கவள். அதனுல் அவளுக்கு இன்னொருவன் அழகாகத் தோன்றவில்லை. என் ஆசைநாயகி எனக்கு சுகம்தருபவள் அதனுல் அவள் என்னை அதிருப்திப்படுத்த விரும்பவில்லை என்னுடைய பிரதம அமைச்சர் என்னிடம் சம்பளம் வாங்குபவர். ஆகவே அவர் எனக்குப் பயப்படுகிருர். ஆனுல் எழுத்தாளனே சுதந்திரமாகச் சிந்திப்பவன். பணத்தையும் பெயரையும் பற்றிக் கவலைப்படாதவன் அதனுல் அவன் மனந்திறந்து பேசினுன். அவன் சொன்னதே சரி. உண்மை, என எழுத்தாளனை மிகவும் உயர்வாக மதித்தான் மனத்திருப்தியடைந்தான்.

இதிலிருந்து நாம் அறியவேண்டியது எல்லாவகையிலும் சுதந்திரமாக இருக்க எவனுக்கு முடிகிறதோ— அவனே உண்மையில் முழுமனிதன் என்பதாம்.

கெ. லக்ஷ்மணன்

*

### அகர வரிசை அறிவுரை

அன்பே சிறந்தது
ஆசையை விடு
இணைந்து வாழ்
ஈவது நன்று
உண்மை பேசு
ஊக்கமாய் இரு
எழுதி வாழ்
ஏமாற்றுதே
ஐயம் இட்டுண்
ஒற்றுமையாய் இரு
ஓயாது உழை
ஔவை சொல் அறி

"ஸ்ரீ"

### விடுகதை விடுவோமா?

1 காய்ந்த தடியில் கறுப்புப் பூ அது என்ன?
குடை

2. நீண்ட மரமாம் தண்ணீர் இல்லாமல் வளர்ந்ததாம் கொப்பும் இல்லை இலையும் இல்லை. அது என்ன மரம்?
தந்திமரம்

3. ஆட்டுவித்தால் ஆடிடுவான் சுறுசுறுப்புள்ளவருக்கு எடுத்துக் காட்டு. அது என்ன?
பம்பரம்

4. மனிதனைப் போல் பாவம் பார்க்க மாட்டான் தொட்டால் சாகடிப்பான். அவன் யார்?
மின்சாரம்

5. அழகான பானை குயவன் செய்ததல்ல உள்ளுக்குள்ளே வெள்ளை வண்ணுன் வெளுத்ததல்ல அதற்குள்ளே தண்ணீர் மனிதன் விட்டதல்ல. அது என்ன?
தேங்காய்




### பத்துக் கேள்விகள் பதில் தெரியுமா?

1. தொலைக்காட்சி யாரால்? எந்த ஆண்டு? எந்த நாட்டவர் கண்டுபிடித்தார்?
ஜோன் லொகி பயர்ட், 1926, ஸ்கொட்லாந்து.

2. வானில் மிகப் பெரிய நட்சத்திரம் எது?
ஓரிசா.

3. உலகில் சிறந்த கலைக்கோயில் எங்கு உள்ளது?
இந்தியாவில் ராமேஸ்வரத்தில்.

4. உலகில் மிக வெப்பமான இடங்கள் எங்கிருக்கின்றன?
ஆசியாவில்.

5. முடிவில்லாத நகரம் எது?
உரோம்.

6 ஐந்து நதிகளின் நாடு எது?
பஞ்சாப்.

7. விண்வெளிக்கு பயணம் செய்த முதல் மனிதன் யார்?
மேஜர் யூரி ககாரின்

8 விண்வெளிக்குப் பயணம் செய்த முதல் பெண்மணி யார்?
வலன்ரீனு ரெரெஸ்கோவா

9 இருதய மாற்று முறையைக் கண்டுபிடித்தவர் யார்?
கலாநிதி கிறிஸ்டியன் பெர்னுட்.

10 வாயு விளக்கைக் கண்டுபிடித்தவர் யார்?
வில்லியம் மேர்டொக்.

[illegible]

# பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

### மூன்று பொம்மைகள்

காந்திஜி பெரிதும் விரும்பிப் பாதுகாத்த மூன்று குரங்குகளின் பொம்மை போதிக்கும் 'தீயவை பார்க்காதே, தீயவை கேட்காதே, தீயவை பேசாதே' என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனுல் காந்தியுடன் நெருங்கிப்பழகிய காகா காலேல்கருக்குத் தோன்றிய சிந்தனையோ விநோதமானது. தன்னைப் பார்த்து என்ன புண்ணியம் என்று தோன்றி, கண்ணை மூடிக் கொண்டுவிட்டதாகவும், இந்த மடையனின் பேச்சைக்கேட்டு என்ன லாபம் என்பதால் காதை அடைத்துக்கொண்டிருக்கலாம், இவனுக்கு உபதேசம் செய்து பிரயோசனமில்லை என்ற முடிவுக்கு வந்து வாயைப் பொத்திக்கொண்டிருக்கலாம் என்றும் எழுதியுள்ளார்.

*

### முதன்மை பெற்ற பத்து மொழிகள்

உலகில் அதிகம் பேசப்படும் முதல் பத்து மொழிகளின் பட்டியல் பின்வருமாறு!

| மொழி | | பேசுபவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சீனமொழி | — | 650,000,000 |
| ஆங்கிலம் | — | 358,000,000 |
| ருஷ்யன் | — | 233,000,000 |
| ஸ்பானிஷ் | — | 213,000,000 |
| ஹிந்தி | — | 209,000,000 |
| அரபிக் | — | 125,000,000 |
| போர்த்துகீஸ் | — | 124,000,000 |
| பெங்காலி | — | 123,000,000 |
| ஜெர்மன் | — | 120,000,000 |
| ஜப்பானிஸ் | — | 110,000,000 |

### வேலை நிறுத்தம் செய்த முதல் நபர் யார்?

உலகில் முதன் முறையாக வேலை நிறுத்தம் செய்தவர் யார்! ஒரு சங்கீத வித்வான் தான் எனத் தெரிய வருகின்றது.

கி. மு 309 ஆம் ஆண்டில் கிரேக்க நாட்டில் அறிஸ்டோஸ் என்ற பெயருடன் புல்லாங்குழல் வித்துவான் இருந்தார்

ஜூபிட்டர் ஆலயத்தில் ஒரு நிகழ்ச்சியில் பங்குபற்ற அறிஸ்டோஸின் வாத்திய இசைக்குழு சென்றிருந்தது. ஆலயத்தில் வைத்துச் சாப்பிடுவதற்கு அக்குழுவிற்கு தடைவிதிக்கப்பட்டது.

அவ்வளவுதான்! அறிஸ்டோஸ் தனது குழுவினரை அழைத்துக் கொண்டு வெளிநடப்புச் செய்தார். அத்துடன் மிக முக்கியமான அவ்வாலய நிகழ்ச்சியில் பங்குபற்ருது வேலை நிறுத்தம் செய்தார்.

### இரண்டு வார்த்தைகளின் விலை இரண்டு கோடி ரூபா

ஹொலிவூட் படத்தயாரிப்பாளர் ஒருவருக்கு பிரபல நாவலான 'லெஸ் கேர்ள்ஸ்' எனும் நாவலின் பெயர் பிடித்து விட்டது

அந்தப் பெயருக்காக அந்த நாவலின் உரிமையை வாங்கிக் கொண்டார்

அவர் எடுத்த படத்திற்கு அந்தக் கதையை அவர் உபயோகிக்க [illegible] தான் படமாக்கினுர். ஆனுல் அப்படத்திற்கு 'லெஸ் கேர்ள்ஸ்' எனப் பெயரிட்டார்.

அந்த இரண்டு சொற்களுக்கும் அவர் கொடுத்த விலை இரண்டு கோடி ரூபா.

அம்மாடியோவ்!!

### நிர்வாணம்

ஆடையை விலக்கிவிட்டால் உடல் நிர்வாணம். ஆசையை விலக்கி விட்டால் உள்ளம் நிர்வாணம்

- கண்ணதாசன்

### அகராதி

ஆலோசகர்: உங்களின் கைக்கடிகாரத்தை வாங்கிப் பார்த்து உங்களுக்கே நேரம் சொல்பவர்; பின்னர் அதற்கு பணம் செலுத்தும்படி 'பில்'லும் அனுப்புபவர்.

நர்ஸ்: நித்திரையில் இருக்கும் நோயாளியை எழுப்பி, நித்திரைக் குளிகையை வழங்குபவர்.

புதைபொருளாராய்ச்சியாளர்: புராதன இடிபாடுகளுக்கு இடையில் தொழிலை அமைத்துக் கொண்டவர்.

### பூரணமாகத் தடை

அமெரிக்காவில் உள்ள நகரம் ஒன்று தனது எல்லைக்குள் அணுவாயுதங்கள் உற்பத்தி செய்வதை பாவிப்பதை, வைத்து இருப்பதை முற்றுகத் தடைசெய்துள்ளது

இலியனேஸ் மாநிலத்தில் உள்ள இவான்ஸ்டன் நகரமே அது.

இந்த நகரின் முனிசிப்பல் சபை இத்தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

நகரின் சனத்தொகை 75,000 ஆகும்.

### சிகரெட் அன்பளிப்பா? வேண்டவே வேண்டாம்!

சிகரெட்டை யாருக்கும் அன்பளிப்பாக அரேபியாவில் கொடுக்காதீர்கள்.

கொடுப்பவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்.

சவூதி அரேபியாவில் இப்படி ஒரு விநோதச் சட்டம் உள்ளது.

அதாவது சிகரெட் பக்கெற், சிகரெட் லைற்றர் போன்ற பொருள்களை யாரும் யாருக்கும் அன்பளிப்புச்செய்யக்கூடாது.

உடல் நலத்தைக் கெடுக்கும் அப்பொருள்களை யாரும் பாவிக்காமல் இருக்கவே இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனப் பிரச்சினையால் சீரழியும் யாழ்ப்பாணத்துப் பெண்கள்

யாழ் பல்கலைக்கழக புவியியல் கழகம் அண்மையில் நடத்திய இன்றைய காலகட்டத்தில் தமிழ்ப் பெண்களின் நிலை'' எனும் பொருள் பற்றிய கருத்தரங்கில் விரிவுரையாளர் திரு கார்த்திகேசு குகபாலன், விரிவுரையாளர் திருமதி. சித்திரலேகா மௌனகுரு, சட்டத்தரணி செல்வி. சாந்தா அபிமன்னசிங்கம் ஆகியோர் வழங்கிய கருத்துக்களை இந்த தொகுத்துத் தருகின்றோம்.

ரட்ணா

யாழ் சமூகத்தில் பல வருடங்களாகப் பெண்கள் ஆண்மேலாதிக்கம், இனப்பெருக்கம், மாவியல் கலாசார கட்டுப்பாடு, கூலி உழைப்பு என்பவற்றால் கட்டுப்படுத்தப்பட்டு அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வருகிறார்கள்.

தொழிற்துறை

1985 ஆம் ஆண்டு கைத்தொழில் நிலையங்களில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்று அதிர்ச்சி தரும் தகவல்களைத் தந்தது.

அனேகமான தொழில் நிலையங்களில் பெண்கள் மிகமிகக் குறைந்த கூலிக்கு ரோபி பேப்பர் சுற்றுதல், கற்பூரம், தேயிலை உணவுப் பண்டங்கள் ஆகியவற்றைப் பக்கற்றில் அடைத்தல் என்பனவற்றிற்கு பயன்படுத்தப்பட்டு வருவது தெரிய வந்தது. நடுத்தரவர்க்கத்துப் பெண்களே இவ் வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றனர்.

கிராமப்புறத்து வறிய பெண்கள் களைபிடுங்கல், அருவி வெட்டுதல் போன்ற தோட்ட வேலைகளுக்கு மிகக்குறைந்த கூலிக்கு அமர்த்தப்படுகின்றனர்.

நகர்ப்புறத்துக் குடும்பப்பெண்கள் இன்று நவீன சமையலறை உபகரணங்களால் தமது மனையியல் வேலைச்சுமையை ஓரளவு குறைத்துள்ளனர்.

இருந்தும் பல பெண்கள் மாதாந்த வேதன வேலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர்.

இவர்கள் ஆசிரிய, மருத்துவ, எழுதுவினைஞர் வேலைகளுக்கே அதிகம் செல்கிறார்கள்.

பல பெண்கள் தமக்குச் சீதனம் சேர்ப்பதற்காகத் தமது உழைப்பைச் சேமிக்கவேண்டியுள்ளனர்.

இதனால் அவர்கள் தமது சிறிய ஆசைகளைக் கூடத் தியாகம் செய்ய வேண்டியுள்ளனர்.

வேலைக்குச் செல்லும் குடும்பப் பெண்களால் தமது வேதனத்தைச் சுதந்திரமாகச் செலவழிக்க முடிவதில்லை.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இது அவர்களுக்குப் புரியாது. பெண்ணின் உழைப்பு முழுவதும் குடும்பத்துக்காகவே செலவழிக்கப்படுகிறது. ஆணின் உழைப்பின் ஒருபகுதி அவர்களின் பொழுது போக்குக்கும் வெளிக்கடைகளில் உண்ணும் உணவுக்கும் செலவாகிறது.

பிரசவம்

வேலைக்குச் செல்லும் பெண்களுக்குள்ள அடுத்த பிரச்சினை குழந்தைகளைப் பெறுதலும்

## ( நங்கை )

பராமரித்தலுமாகும். கர்ப்பிணிப்பெண் வழியர்களின் பிரசவ விடுமுறை இரு குழந்தைகளின் பின் கட்டுப்படுத்தப்படுகின்றது.

இது பெண்களின்பாலியலைக் கட்டுப்படுத்துகின்றது.

காப்பகம்

இன்று நம் நாட்டில் வேலைக்குச் செல்லும் பெண்கள் தமது குழந்தைகளை விட்டுச்செல்ல குழந்தைகள் காப்பகங்கள் இல்லை.

இவற்றைத் தொழிற்சாலைகள், திணைக்களங்கள் ஏற்படுத்த நினைக்கவில்லை.

குறிப்பாக மலையகத் தோட்டத்தொழிலாளப் பெண்கள் இந்தவகையில் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள்.

நாளொன்றுக்கு 18மணி நேரவேலைசெய்யும் அவர்கள் மிகமிகக்குறைந்த ஊதியத்தையே தேயிலை பறிக்கப் பெறுகின்றார்கள்.

இவர்கள் ஐந்தவயதிலேயே தொழிலிற்குச் செல்லவேண்டியுள்ளது.

போஷாக்கின்மை

சுகாதார நிலைகள் ஆய்வின்படி பெண்களே அதிகளவு இரத்தசோகை இரும்புச்சத்துக் குறைவு, புற்று நோய் போன்ற நோய்களால் பாதிக்கப்படுகின்றார்கள்.

சமூகப் பழக்க வழக்கங்கள், உணவுக் குறைவு, பிரசவம் குழந்தை உணவு ஆகிய வற்றால் இவர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள்.

சீதனம்

இன்று சீதனமே ஒரு பெண்ணின் எதிர்காலத்தைப் பெரும்பாலும் நிர்ணயிக்கிறது எனலாம். ஆரம்ப காலங்களில் ஒரு பெண் தனிக்குடித்தனம் செய்வதற்காகப் பெற்றோரால் பொருட்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இந்த முறை படிப்படியாக அரசியல், பொருளாதார மாற்றங்களால் இன்று வேரறுக்க முடியாத வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

சீதனம் என்ற இந்த சமூக நோய் காரணமாகக் கடந்த 40 வருடங்களுள் பெண்களின் திருமண வயது 30 வயதிலிருந்து 42 வயதுவரை வளர்ந்துள்ளது.

விவாகமாகாத பெண்களின் தொகை வருடா வருடம் அதிகரித்து வருகின்றது. சீதனம் இளைஞர்கள் வெளிநாடு செல்வது, போராளிகளாக மாறுவது, குடித்தொகை மாற்றநிலை ஆகியவை இதற்குக் காரணங்கள்.

விவாகங்கள் பின்போடப் படுவதற்கான முக்கிய காரணம் இளைஞர்களை போட்டிச் சந்தைக்குக் கொண்டு வரும் குறிப்பிட்ட பெற்றோர். பெண்களின் சுயலாபமே,

சீதனத்தை ஒரு முதலீடாக நின்று குழல் முறை தகைமைக்கு விலை பேசலும் ஒரு காரணம். அதாவது அண்ணன் தங்கைக்காக சீதனம் வாங்குவது.

சீதனப் பிரச்சினை சில குடும்பங்களில் சில பொய்த் தாரர்களால் சீராகத் தீர்க்கப்படுவதில்லை.

இதனால் குடும்பங்களில் பிரச்சினையும் பிள்ளைகளின் மனநிலையில் பாதிப்பும் ஏற்படுகின்றன.

இன்று சீதனம் என்பது பணமாக, நகையாக, வீடு - காணியாக, வெளிநாடு அனுப்புவதாக, தங்கைக்கு மாப்பிள்ளை தருவதாகப் பல வடிவங்களில் உள்ளது

அந்தஸ்து

தமிழ்ப் பெண்கள் பிறந்து இறக்கும்வரை ஓர் ஆணின் பாதுகாப்பிலேயே இருக்கவேண்டியுள்ளது.

திருமணமாகும்வரை பெற்றோரின் பாதுகாப்பிலும் திருமணத்தின் பின் கணவனின் பாதுகாப்பிலும் இருக்க வேண்டியுள்ளது.

அவளுக்கென்று தனிப்பட்ட எந்த ஒரு அந்தஸ்தும் சட்டத்தில் இல்லை.

தேசவழமைச் சட்டத்தின்படி சீதனத்தைக் கணவனின் அனுமதி இன்றி எந்த ஒரு தமிழ்ப் பெண்ணும் விற்கவோ மாற்றவோ முடியாது ★

---

# நீத்தார் புகழாரம்

## எங்கள் தவம் ஐயா!

'தவம் ஐயா மறைந்து விட்டார்' என்ற செய்தி பொய்யாக இருக்கும் என்றே பல பின் மனமும் எண்ணியது.

இளமையில் வடமொழியையும், வேதத்தையும் குரு வாயிலாகக் கற்று நல்ல கண்காணிப்பில் குருத்துவப் பயிற்சி பெற்று வளர்ச்சி பெற்ற தவம் ஐயாவின் மறைவு அவரது குடும்பத்தினருக்கோ உறவினருக்கோ மட்டும் ஏற்பட்ட இழப்பு அல்ல நம் சூழலில் ஆலய வழிபாடு செய்யும் அனைவருக்குமே ஒரு பெரும் இழப்பாகும்.

சாந்தா கொல்லை சிவன் கோவிலிலும், கறிபுரம் பத்திரகாளி கோவிலிலும் பூசகராக இருந்த காலங்களில் இவ் ஆலயங்களில் வழிபடும் ஒவ்வொருவரும் மிகுந்த அன்பும் அபிமானமுமுடையவர்களாக இருந்தனர்;

தான் பூசை செய்யும் ஆலயங்களில் அடியார்களை அக்கறை கொள்ளச் செய்வதில் வல்லவராய் விளங்கினார். பொன்னாலை கோவிலில் குருக்களாய்



இருந்த கொடியேற்றக் கிரியை செய்த வேளைகளில் பலரது தூய அன்பைப் பெற்றிருந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி அடையட்டும்.

★ ஓர் அன்பன்

## பசி தீர்த்தவர் பாண் அப்பா

முன்னைப் புதிதாக நல்லை பழம் பின்னை உலகில் பெருமைகள் பெற்று தன்னை உயர்த்தித் தகைமைகள் பெறுவோர், வாழ்வில் மின்னி நிலைத்த ஒளி பெறுவர். குற்றமின்றிக் குடிசெய்து வாழ்ந்து, பெற்ற செல்வத்தை உற்றவர்க்கும் அற்றவர்க்கும் உதவி, நற்றவத்தினர் இவரென மொழிய, பரமன்மேல் பற்றுமிக்கவராக வாழ்ந்தவர்—

அமரர் பரமலிங்கம் அவர்கள்.

பண்ணிசைப் பாடகராக, இலக்கிய விமர்சகராக, நகைச்சுவையானராக கேட்பார் இனிக்க மொழியும் சொல் விற்பன்னராக, அருகிய நாட்டுப் பாடல்களை அறிவிக்கும் அறிஞராக இவர் விளங்கியது இவரது பரந்த ஞானத்தையும் ஆழ்ந்த புலமையையும் எடுத்துக்காட்டுகின்றன

பேக்கரித் தொழிலை வைகத்துடன் செய்தமையினால் அது இவரைக் காக்கும் தொழிலாகவும், பல நன்மைக்கு ஆக்கம் தரும் தொழிலாகவும், அமைந்தது இத்தொழில் மூலம் வாழ்வில் வளம் கண்டதுடன் வளரும் குழந்தைகளின் வாஞ்சைக்கும் உரியவரானார். பாடசாலைப் பிள்ளைகளுக்குப் பணிசு விநியோகம் செய்தமையினால் அவர்களால் பணிவுடனும் பாசத்துடனும் 'பாண் அப்பா' என்று பரிவுடன் அழைக்கப்பட்டார்.

இவ் அன்புப் பெயர் அனைவரும் அறிந்த பெயராயிற்று.

★ நண்பன்

---

# சொற்சிலம்பம்

## போட்டி இல. 65

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | ■ | 3 | 4 |
| | ■ | ■ | | ■ | 5 | ■ | |
| 6 | 7 | 8 | | ■ | 9 | 10 | ■ |
| 11 | | | ■ | 12 | | | 13 |
| | ■ | 14 | | | | ■ | |
| ■ | 15 | | ■ | | ■ | 16 | |
| 17 | | ■ | 18 | | | | ■ |
| 19 | | | | | ■ | 20 | |

அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வன்/செல்வி:...............

...............

வயது/ ...............

விலாசம்/ ...............

...............

ஒப்பம்/ ...............

**மேலிருந்து கீழ்**

1. மறவாமை
2. மாதத்தில் நாலை
4. மூன்று
5. விலாசம்
7. அணி
8. சூரியன்
10. புற்று தலைகீழாக மாறி விட்டது
12. மனைவியை இழந்தவன்
13. ஒருவகை வாழை மரம். மாறிக்கிடக்கிறது
15. சீதையின் தாய் வீடு
16. பிடிவாதம்
17. இலங்கையின் பணத்தின் அடிப்படை அலகு இறுதி இழந்து நிற்கிறது.
18. பணம். அதன் கடைசி எழுத்தைக் காணவில்லை

**இடமிருந்து வலம்**

1. பல்லி வாத வாய்
3. நீர்ப் வடிவம்
6. இதைக் கணிப்பது ஒரு கலை
9. ஆசற்று
11. கடல்
12. தவம் செய்வதினால் உண்டாகும் பலம்
14. நீரோ மன்னனின் நாடு
15. இன்று சருகிகளின் இயக்கத்துக்குக் காரணமாக இருப்பவன்
16. நாற்கு ஒன்று என்பதைக் குறிப்பது இறுதி எழுத்தை இழந்து விட்டது
17. மறைவில் நிட்டமிடப்படுவது
18. பாம்பு
19. மூத்த மகன்
20. அமைச்சர்

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்.

1. ''சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டுமே பங்குபற்றலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. கூப்பனை நிரப்பும்போது திரு. அல்லது திருமதி அல்லது செல்வன் அல்லது செல்வி என்பது கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்.
5. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
6. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 65. சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
8. உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

★ சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பல சமயங்களில் மூன்றுக்கும் அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதியோரின் இருந்து அதிஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

**சொற்சிலம்பம் போட்டி இல. 63 பரிசு பெற்றவர்களின் விபரம்**

முதலாம் பரிசு:- திருமதி சி. சுப்பிரமணியம் ஆசிரியை அரசினர் த. க. பாடசாலை, கொக்குவில்கட்டு,

இரண்டாம்பரிசு:- செல்வி பிரேமிளா துரைச்சாமி 200, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

மூன்றும் பரிசு:- செல்வன் ரமேஷ்குமார் தருமரத்தினம், தொழில் நுட்பக் கல்லூரி, கொக்குவில்.

★ பரிசு பெற்றவர்களுக்கு உரிய பணம் காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும். நேரில் எவரும் வரவேண்டியதில்லை.

**சொற்சிலம்பம் போட்டி இல. 63 விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. சிவசுந்தரமணி
6. குதி
7. கரம்பு
9. மாடி
10. பகைவன்
13. அம்
14. கரை
15. பாதி
16. கோசலம்
18. தாபனம்
19. குமிழ்
21. நிதி
22. புழுதி

**மேலிருந்து கீழ்**

1. சிரசம்
2. சுதம்பம்
3. (இ)ந்து
4. மருடி
5. ணிதி
8. புகை
9. மான்
11. வயசு
12. ஓரை
13. அதிபதி
14. கம்பி
15. பாதாதி
16. கொம்பு
17. வருதி
20. ழ்கு

---

## கடவுளையும் மிஞ்சு..

(3 ஆம் பக்க தொடர்ச்சி)

கப்பட்டிருந்தது. 4ம் 5ம், 6ம், 7ம் வகுப்புகளுக்கு தமிழ்ப் பாடத்துக்குப் பாடநூல்களாக வசனத்துக்கு நாவலர் பெரிய புராணமும், பாட்டிற்கு திருவாதவூரடிகள் புராணமும் நான்கு பகுதியாக அமைந்தன. இதனால் அன்றைய மாணவர்கள் பிற்காலத்தில் மெய்ஞான உணர்வுடன் வாழ்க்கையை வளமுறச் செய்தனர்.

இன்று பாடத்திட்டங்கள் அடிக்கடி மாற்றப்படுகின்றன. பொருத்தமற்றவையாகவும் விளங்குகின்றன. கணித பாடத்தில் இன்றைய மாணவர் படும் அவதி அளப்பரியது. பாடத்திட்டம் சரியாக வகுக்கப்படாமையால் பாடம் கடினமாகி, அதில் மாணவருக்கு வெறுப்புணர்வை ஏற்படுத்துகின்றன. எட்டாம் வகுப்புத்திட்டம், கணனிக்கு (Computer) ஏற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது வறிய சிறிய ஸ்ரீலங்காவில் கணனிமுறை மாணவருக்குப் புதிதானபடியால் பொருத்தமற்றதாகிறது.

கேள்வி:- ஆசிரிய சேவையால் ஒருவர் அடையக்கூடிய திருப்தி எதுவாக இருக்கும்?

பதில்:- பிள்ளைகளுக்குக் கல்விச் சேவை செய்ய அதிபர் பதவியிலும் பார்க்க உதவி ஆசிரியர் பதவியே அதிக சந்தர்ப்பமளிக்கும். ஆசிரியர் எவ்வளவு திறமையுடனும் நல்ல மனதுடனும் கற்பிக்கின்றாரோ அதன் பலாபலன்களை அவர் முதுமையில் அல்லது இளைப்பாறிய காலத்தில் உணர்ந்து மனநிறை

வெய்த முடியும். ஒரு மாணவன் ஒய்வு பெற்ற ஆசிரியர் முன் சென்று ''உங்கள் பணியால் தான் நான் இன்று இந்த உயர் நிலையில் இருக்கிறேன்'' எனக் கூறும்போது அந்த ஆசிரியர் தமது சேவையின் பூரணத்துவத்தை உணர்கிறார்.

சிறந்த ஆசிரியர்கள் ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்று மனத்திடமடையலாம்.

கேள்வி: இவ்வளவு ஆற்றல் அனுபவம் உடைய நீங்கள் ஒய்வு பெறும் வயதுக்கு முன்னதாக 55 ஆவது வயதில் ஒய்வு பெறக்காரணம் என்ன?

பதில்:- கல்லூரியைத் திறம்பட எமது எண்ணப்படி நடத்த அரசாங்கத் தலையீடுகள் தடையாக இருந்தன எனவே, எனது குரு அமரர் சைவப்பெரியார் சிவபாதசுந்தரம், எனது பேரனார் ஆகியோரின் வழியினைப் பின்பற்றி எனது 55 ஆவது வயதில் ஒய்வு பெற்றேன். இது ஒரு சிறந்த முடிவு என்பதை இப்போதும் உணர்கிறேன் ★

## சந்தேக...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பதை அறியாத பலர் பற்றி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆட்கொணர்வு மனுக்கள் நீண்ட காலமாக விசாரணைக்கு எடுக்கப்படாமல் இருக்கின்றன'— இப்படி இலங்கை வழக்கறிஞர் சபைத் தலைவர் கூறியுள்ள கருத்தை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன் — இப்படி அவர் கருத்து வெளியிட்டார்.

## சனியைச்---

(5ம் பக்கத் தொடர்ச்சி)

யாவசியமான யாவும் கிடைத்தல், இக்கவ சுபாவம், தர்மசிந்தை, கடின உடலுழைப்பு, சலிப்புத்தன்மை, பேச்சில் சுருக்கம், ஊக்கம், தனிமை, விருப்பு என்னும் சலசலப்பற்றதும் ஆடம்பரமற்றதுமான பெற்றியதாம் சிறந்த நீதிபதிகள், வாதத்திறமை மிக்க நியாயவாதிகள், கணித மேதைகள் மற்றும் வாழ்க்கையில் ஆரவாரமற்ற சிந்தனையாளர்கள், ஞானிகள், சித்தர்கள் என்போர் சனியின் நல்லாதிக்கம் பெற்ற புண்ணிய சீலர்களாம். இதற்கு எதிர்மாறாக ஜென்ம ஜாதகத்தில் சனி கெட்டு நிற்கும்போது, துக்கம், சோகம், பொறுமை, சந்தேகம், பொய்மை முரட்டுப்பிடிவாதம், நம்பிக்கையின்மை, திருப்தியின்மை என்னும் அசுபபலன்களையும் பூர்வஜென்ம கர்மபலனின் தண்டனை என அனுபவித்தல் (அங்கவீனம், அவலட்சணம் என்பன இதில் அடங்கும்) போன்ற துர்ப்பாக்கிய நிலையையும் அளந்து அறுதியிட்டு வழங்குவார். எனவே தான் சனி நீதிதேவன் ஆகிறார். நிலைவு இரசிக்கும் மந்தர்கள் இருட்டை வெறுப்பது போன்றதே இந்நிலை. சனிபூர்வஜென்ம கர்ம வினைப்பயனின்படி ஜீவராசிகளுக்கு இப்பிறவியில் தீர்ப்பு வழங்குவது போன்றே நற்பலன்களையும் தீயபலன்களையும் கொடுக்கிறார் என்பது இந்துமத தத்துவமாகும். என் ஜோதிடரும் சனியின் எண்ணை எட்டையும் பிறப்பெண்ணாகக் கொண்டவர்கள் விதிவசப்பட்ட

மாந்தர் என வர்ணிக்கிறார்கள். சனி ஜென்ம ஜாதகங்களில் 8ம் இராசியில் நின்றாலும், கோசாரத்தில் 8ம் இடத்தில் நின்றாலும் தீய பலன்களையே தருவார் என்பர் ஜோதிட வல்லுனர். அதேநேரம் துலா இராசியில் சனி உச்சமடையும் போதும், மகர-கும்ப இராசிகளில் ஆட்சி அடையும்போதும், கோசாரத்தில் 3ம்6ம11ம் இடங்களில் இருக்கும் போதும் நற்பலன்களைக் கொடுப்பார் என்பதும் ஜோதிடப் பொதுவிதி. [illegible] சனிவாரங்கள், இரவு நேரங்கள், சனி திசை புத்தி காலங்கள், என்பன சனி நற்பலன் [illegible]

## மழலை உலகம்

பாராட்டுடன் வளரும் குழந்தை மதிக்கக் கற்றுக் கொள்ளுகிறது.

விமர்சனத்தோடு வளர்க்கப்படும் குழந்தை வெறுப்பதைத் தெரிந்து கொள்கிறது. ★

## காலும் தலையும்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு இதனையும் திருமூலர் தெளிவுபடுத்தியுள்ளார். இறைவன் தமது திருவடியை அடியார் முடியில் சூட்டுவதே அவன் திருவருள் பாலித்ததின் அடையாளம் அவ்வாறு இறைவன் திருவடி தீட்சை பெருன் உயிரின் பிறவிக்கட்டு, ஆணவக்கட்டு அறும் அக்கட்டறக் கட்டற உயிரின் நெஞ்சமயக்கம் நீங்கும், மயக்கக்கேடு அழியும். ஞானம் பிறக்கும். ஞானம் பெற்ற உயிரைப் பரன் தன் வண்ணம் ஆக்கத் திருவுளம் கொள்ளுவான் இறுதியில் உயிர் மேல் கொண்ட செம்மைநலம் துய்க்கும். அச்செம்மை நலம் சொல்லால் வரையறுத்துக் கூற இயலாதது.

''கால் கொண்டென் சென்னியிற் கட்டறக் கட்டற
மால் கொண்ட நெஞ்சின் மயக்கிற் றுயக்கறப்
பால் கொண்ட வென்னைப் பரன்கொள்ள நாடுறும்
மேல் கொண்டென் செம்மை விளம்பவொண் ணாதே''
(திருமந்திரம்)

இறைவன் திருவருள் பக்குவ ஆன்மாக்களுக்குப் பலவழிகளில் வெளிப்படும்! பயன்தரும் அவற்[illegible] ஒசையும் அது தரும் பேற்றினையும் திருமூலர் முதன்மையானவை என்று கருத ★

## சிறையில்---

(5 ஆம் பக்க தொடர்ச்சி)

இளைத்தவர் பெற்றெடுப்பரோ? நான் இந்நீரை உண்டு உயிர் வாழ்வேனாகில், இக்குலத்திற் பிறந்தவனாவேன்.

இவ்வாறு சிந்தித்த சேரமானின் கையிலிருந்த பாத்திரம் பறக்கிறது. நீர் தெறிக்கிறது. உணவையும் நீரையும் உட்கொள்ளாது சிறையிலிருந்து உயிர் துறக்கிறான் சேரர் குலக்கொழுந்து.

உண்ணுவ பருகுவ நீக்கியிருந்து உயிர் துறப்பதை வடக்கிருத்தல் என்று கூறுவது வழக்கம். சிறையில் உண்ணாதிருந்து உயிர்துறந்த முதல் மனிதன் சேரமான் கணைக்கால் இரும்பொறை. வடக்கிருந்து உயிர்துறந்த காரணத்தால் வடக்கிருந்த சேரன் எனவும் அழைக்கப்படுகின்றான். அவனைப் பற்றிய புறநானூற்றுப் பாடல் வருமாறு:-

,குழவி இறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்படு ஞமலியி னிடர்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணும் அளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே. (புறம் 74)

(குழவி-குழந்தை, ஊன்தடி - தசைப்பிண்டம், வாளிற்றப்பார் - வாளாற் பிளக்காது விடார், தொடர்படுதல் - கட்டுப்படுதல், ஞமலி - நாய், கேளிர் - உறவினர், வேளாண்மை - உபகாரம், சிறுபதம் - தண்ணீர், மதுகை - மனவுறுதி, ஈன்மரோ - பெறுவரோ.) ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழும் உடலை வசையாய் வைக்க நாளும் ஆசனம் நன்றாய்ப் பழகு"
10 மில்க்வைற் நீலசோப் அல்லது
8 பார் சோப் அல்லது
8 சுப்ப மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி "யோகாசன இறப்புமலர்"
மில்க்வைற் செய்தி இதழ் 137ஐப் பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற்-யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

02-05-1987 சனிக்கிழமை



அழகு
மணிமணிகளே!
பாடசாலை தொடங்க இருக்கிறது
உங்கள் சீருடைகளை அழகாக வைத்திருக்க
மில்க்வைற் சலவைப் பவுடரை
வாங்கி உபயோகியுங்கள்
56 கிராம் பைக்கற் விலை ரூபா 2/- மட்டுமே
பாவித்த 20 வெற்றுப் பைக்கற்றுக்களை அனுப்பி
அழகிய லேஞ்சி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற்-யாழ்ப்பாணம்.




# இலங்கையில் ராணுவ ரீதியில் நிலைகொள்ள அமெரிக்கா முயற்சி

## கொழும்பு ரஷ்யத் தூதரகம் அறிக்கை

கொழும்பு, மே 1
இனப் பிரச்சினையைச் சாட்டாக வைத்து இலங்கையில் தனது இராணுவத்தை நிலை கொள்ளச் செய்வதில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

இப்படி ரஷ்யா கண்டனம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகம் விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராளிகளுக்கு ரஷ்யா ஆயுதங்கள் வழங்குவதாக மேற்கு நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்தியை மறுத்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

அறிக்கையில் கூறப்படுவதாவது:-

இனப்பிரச்சினையை சாட்டாகப் பயன்படுத்தி இராணுவரீதியில் இலங்கையில் நிலைகொள்ள சில சக்திகள், குறிப்பாக அமெரிக்கா முயற்சிக்கின்றது.

போராளிகளுக்கு ஆயுதங்களை ரஷ்யா வழங்குகின்றது என்ற மேற்குலகப் பத்திரிகைச் செய்திகள் அச்சக்திகளின் தீய நோக்கத்தையே புலப்படுத்துகின்றன.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் திருகோணமலைத் துறைமுகத்தை தனது படைத் தளமாக மாற்றுவதற்கு அமெரிக்கா முயல்கின்றது.

"வோய்ஸ் ஆப் அமெரிக்கா" நிலையம் ஒன்றை இலங்கையில் நிறுவும் முயற்சி குறித்து ரஷ்யா ஆழ்ந்த கவலை கொள்கிறது.

இப்படி ரஷ்யதூதரகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ச)

## எம்.ஜி.ஆர்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
விக்கப்பட்டபோது, இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ.க்களும் அதை வரவேற்றனர்.

இவை எதனைப் புலப்படுத்துகின்றது? தன் சொல்லிற் தான் வசம் ஆடுகின்றதா? அல்லது யார்தான் தன்னை ஆட்டுகின்றதா? அல்லது தனும் வாலும் சேர்ந்து ஆடுகின்றனவா?

இக்கேள்விகளுக்கு விரைவில் பதில் தெரியத்தானே வேண்டும் என்று அரசியல் அவதானிகள் வாய் அசைக்கிறார்கள்!

## கொழும்பில் இடதுசாரிகளின் மே தின ஊர்வலம் கலைப்பு

### கண்ணீர்ப் புகை, துப்பாக்கிச் சூடு, ஒருவர் பலியானார்

கொழும்பு, மே. 1
இடதுசாரிக் கட்சிகள் நேற்று கொழும்பில் நடத்திய மே தின ஊர்வலங்கள் பொலிஸாரினால் கலைக்கப்பட்டன.

ஆகாயத்தில் சுட்டும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளைப் பாவித்தும் பொலிசார் ஊர்வலங்களைக் கலைத்தனர்.

இச்சம்பவங்களில் ஒருவர் பலியானார்.

ஊர்வலத்தில் வந்தவர்கள் கற்களைப் பொலிஸார் மீது வீசினர். கற்களுடன் இரண்டு கிரனேட்டுக்களும் வீசப்பட்டன. பாரதூரமான காயங்கள் எவருக்கும் ஏற்படவில்லை.

லங்கா சமசமாஜக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இடதுசாரிக் கட்சிகளின் இந்த மேதினக் கூட்டம் நடந்தது.

லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆகியன கூட்டாக இம்மேதினத்தை நடத்தின.

அதன் பின்னர் ஆயிரக்கணக்கானோர் ஊர்வலமாக வீதியில் செல்ல முன்வந்தனர்.

சிவப்பு நிற சுலோக அட்டைகளைத் தூக்கியபடி கோஷங்களை எழுப்பியபடி கூடித்தொண்டர்கள் ஊர்வலமாகச் செல்லத் தொடங்கினர்.

அவ்வேளை தான் பொலிஸார் வந்து தடுத்தனர். தடுத்தும் ஊர்வலத்தை தொடர்ந்து நடத்த முயற்சிக்கப்பட்ட வேளையே பொலிஸார் ஆகாயத்தில் சுட்டும் கண்ணீர்ப் புகைக்குண்டு பாவித்தும் குண்டாந்தடிப் பிரயோகம் செய்தும் ஊர்வலத்தைக் கலைத்தனர்.

இதனிடையில் நவ சமசமாஜக் கட்சி நடத்திய மேதின ஊர்வலமும் இதேமாதிரி பொலிஸாரினால் கலைக்கப்பட்டது. (இ-எ)

# தமிழ் மக்கள் துயரங்களுக்கு விரைவில் முடிவு வேண்டும்

## கொக்குவில் கூட்டத்தில் விஜயானந்தன் உரை

—அலுவலகச் செய்தியாளர்!—
எஸ் ஜே. பி. ரட்ணதுரை

யாழ்ப்பாணம், மே 1
தமிழ்மக்கள் இன்று அநுபவித்துவரும் துயரங்களுக்கு விரைவில் ஒரு முடிவு காணப்பட வேண்டும். அம்முடிவு சகல மக்களும் ஏற்கக்கூடிய ஒரு அரசியல் தீர்வாக இருக்க வேண்டும்.

இலங்கை தொழிலாளர் சம்மேளனத்தின் வட பிரதேச செயலாளர் திரு.விஜயானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், வெகுஜன அமைப்புக்கள் இணைந்து மே தின ஊர்வலம் ஒன்றை நேற்று நடத்தின.

நல்லூர் இந்து வீதியில் ஆரம்பமான இவற்றின் ஊர்வலம் நாவலர் வீதி, ஸ்ரான்லி வீதி, கே.கே.எஸ். வீதி வழியாக கொக்குவில் சந்தியை அடைந்தது.

அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. விஜயானந்தன் மேலும் பேசுகையில்:-

அரச இராணுவத் தீர்வையே நாடி செயற்பட்டு வருகிறது.

அண்மையில் அரச தொடுத்துள்ள மிலேச்சத்தனமான விமானத் தாக்குதல்கள் இன ஒழிப்பின் ஒரு கட்ட வடிவம் என்றார்.

திரு. க. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு கே செந்திவேல் உரையாற்றுகையில்:- தென் ஆசியாவிலேயே தினமும் மனிதப் படுகொலைகள் நடக்கும் மத்திய ஸ்தானமாக இலங்கை மாறிவிட்டது.

பௌத்த தர்ம ஜனநாயகம் பேசும் ஜே ஆர். வெள்ளை உடை தரித்த சர்வாதிகாரியாகியுள்ளார். நாடு மிக விரைவில் இராணுவ சர்வாதிகார நாடாகப் போகின்றது.

வடபகுதி, தென்பகுதி மக்கள் ஆகியோரும் சேர்ந்த போராடி ஓர் எழுச்சி மிக்க கிளர்ச்சியாலேயே உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும் என்றார்.

திரு ஆ. வைத்திலிங்கம் உரையாற்றுகையில்:

தொழிலாள வர்க்கம் இன்று அனுபவிக்கும் ஒவ்வொரு உரிமையும் போராடிப் பெற்றவை என்றார்.

திரு. கே.ஏ. சுப்பிரமணியம், திரு.ஆ.க. அன்னம், திரு க. திருநாவுக்கரசு, திரு சோ. தேவராசா, திரு ஏ ஜனகன், திரு இராசலோகநாதன், திரு இ. தவராசா, திரு. ரி. குகதாசன், திரு.வே. சிவராசா, திரு. எஸ்.கே. ஜெயதிபாலா, திரு. ந. தம்பதுரை, திரு.வி.திருநாவுக்கரசு, திரு.ஆ. குலசேகரம் ஆகியோரும்

உரையாற்றினர்; சுலோகங்கள்

ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டு கோஷிக்கப்பட்ட சுலோகங்களாவன:-

'அரசாட்சியா? அரக்க ராஜ்ஜியமா?'

'மலையக மக்களைப் பழி வாங்காதே. பிரஜாவுரிமையைப் பேய்க்காட்டாதே'

'விளைநிலத்தை அழிக்காதே; வீடுயும் நிலத்தை எரிக்காதே'

'ஒடுக்குமுறைகளை உடைத்தெறிவோம்.'

'உழைக்கும் மக்களே ஒன்று சேருங்கள்.' (இ-ச)


உப கண்ட...
(8ம் பக்கத் தொடர்ச்சி)

கோரி வருகிறது. சிறு வசமுள்ள 14 ஆயிரத்து 600 சதுரமைல் பிரதேசத்துக்கு இந்தியா உரிமை பாராட்டி வருகிறது.

1981 ஆம் ஆண்டு முதல் எல்லைப் பிரச்சினை தொடர்பாக ஏற்கனவே ஏழு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய இந்தியாவும் சீனாவும் இந்த வருட இறுதியில் எட்டாவது சுற்றுப் பேச்சுக்களை நடத்த உள்ள நேரத்தில் சீன—இந்திய உறவுகள் பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் மற்றொரு அண்டை நாடான பங்களாதேஷுடனும் இந்தியாவுக்கு சுமூகமான உறவு இல்லை.

பங்களாதேஷ் அரச படைகளின் அட்டூழியங்களைத் தாங்க முடியாது சுமார் 55 ஆயிரம் சக்மா இன மக்கள் பங்களாதேஷில் இருந்து அகதிகளாக இந்தியாவின் திரிபுரா மாநிலத்துக்கு வந்துள்ளனர்.


கலை---
(1ம்-பக்கத் தொடர்ச்சி)

போகும் கலைகளை முதியவர்களிடம் இருந்து இளைஞர்களுக்கு பரிமாற்றம் செய்வதும் முக்கியமாகும். இரண்டு பணிகளும் முன்னுரிமை கொடுத்துச் செயலாக்கப்பட வேண்டியவை.

## நாணயமாற்று விகிதம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விபரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கைவங்கியின் 30-04-87ஆம் திகதிய மாற்று விகிதமாகும்).

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 47. 86 |
| அமெ. டாலர் | 28. 80 |
| இந்திய ரூபா | 2.23 |
| ஜேர்மன் மார்க் | 15. 96 |
| கனடா டாலர் | 21. 81 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 78 |
| பிராங் (சுவிஸ்) | 19. 34 |
| அவுஸ். டாலர் | 20 08 |
| சிங்கப்பூர் டாலர் | 13.37 |
| நோர்வே கொரோனர் | 4 25 |
| ஜப்பானிய யென் | 2.04 |

தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட மேதினப் பேரணியில் கலந்து கொண்ட மக்களில் ஒரு பகுதியினரை முதல் இரண்டு படங்களிலும், கூட்ட மைதானத்தில் திரண்டிருந்த பெண்களில் ஒரு சிறு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.
(படம்: ஜெயம்)


வானின் ---
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றது.

அம்பிரம் இந்திராணி (வயது 37) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.


மலையகத் தமிழரின்....
(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பாளர் பரா மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள தொழிலாளர்கள் ஸ்தாபன மயப்படாது இருந்து வருகின்ற பொழுதிலும் மலையகத் தொழிலாளர்கள் தொழிற்சங்க ரீதியில் ஸ்தாபனப்பட்டுள்ளனர்.

அத்தகைய தொழிலாளர்களைச் சுரண்டிவரும் ஏமாற்றிவரும் தொண்டமான்கள் அப்புலேற்றப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்றும் திரு. பரா கூறினார்.

ஜே ஆரின் அரச படைகள் மண்ணிலும் செய்வதில் தமிழீழ விடுதலைப் புலிகள் வகிக்கும் பங்கையும் சாதனைகளையும் திரு பரா பாராட்டினார்.

கன்னாதிட்டி சந்தை மைதானத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்துக்கு தலைமை வகித்த தோழர் டேவிட் தமது தலைமையுரையில் சர்வதேச ரீதியாக 100 ஆண்டுகளுக்கு மேலாக உலக தொழிலாளர் கொண்டாடிவரும் மேதினத்தை இலங்கையில் தடை செய்ததன் மூலம் தனது அரசு அப்பட்டமான முதலாளித்துவ அடிவருடி என்பதை ஜே ஆர். முழு உலகுக்கும் உணர்த்தி விட்டார் என்றார்.

மாணவர் சங்க தலைவர் தோழர் சாள்ஸ் பேசுகையில் தரப்படுத்தல் தமிழ் மாணவர்களின் கல்விக்கு சாவுமணி அடித்த அரசு மேதினக் கொண்டாட்டங்களை தடை செய்ததன் மூலம் தொழிலாளரின் ஒற்றுமைக்கு சாவுமணி அடித்துள்ளது என்றார்.

தொழிற்சங்க தலைவர் திரு செல்வநாயகம் பேசுகையில் ஈழவர் முன்னணி தமிழ் பிரதேசங்களில் மாத்திரமன்றி தென் இலங்கையிலும் மலையகத்திலும் மிக உயர்ந்த யுக்தியுடன் செயற்படுகிறது என்றார்.

தோழர்கள் எம். மகாதேவா, பாலா உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (இ-17)


பிரபா...
(1ம்-பக்கத் தொடர்ச்சி)

அசைக்கமுடியாத உறுதியை உலகிற்குப் பறைசாற்றி நிற்கின்றது.

இத்தினம் இடம்பெறும் "ஹெலிகொப்டர்" 'பொம்மர்' குண்டுவீச்சுத்தாக்குதலின் மத்தியிலும் இலட்சக்கணக்கில் நீங்கள் பங்கேற்று உங்களது வீரத்தையும் தியாகத்தையும் உறுப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

இன்றைய இவ்வரலாறு காணும் உங்கள் எழுச்சியை குழப்ப ஸ்ரீ லங்காவின் விமானப்படை, ஹெலிகொப்டர்கள் துப்பாக்கிப்பிரயோகம் நடத்தியபோதிலும் நீங்கள் சிறிதும் அசையாது நின்று உறுதியாக இவ்வூர்வலத்தை மிகவும் வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளீர்கள் என்று அறிக்கை ஒன்றில் திரு. பிரபாகரன் தெரிவித்துள்ளார். (இ)


மக்களின் ---
(1ஆம் பக்க தொடர்ச்சி)

தருகிறது.

ஜே ஆர். ஜெயவர்த்தனாவோ அல்லது லலித் அத்துலத்முதலியோ எம்மை ஒன்றும் செய்ய முடியாது அவர்களுக்கு அஞ்சமாட்டோம் என்பதை இதன் மூலம் மக்கள் உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

தமிழீழ வரலாற்றிலே சாதனை படைத்த இந்த நாளானது வெகு விரைவில் தமிழீழம் அமைப்பதற்கு வழி கோலும் என்ற நம்பிக்கையை உறுதி செய்கிறது-

இப்படி திரு. கிட்டு கூறினார். (இ-10)


விடுதலைப்...
(1-ஆம்பக்க தொடர்ச்சி)

தாக தமிழ் ஈழ மாணவர் அமைப்பைச் சேர்ந்த பெண் போராளி சத்தியபாமா பேசினார்.

எமது இயக்கத்தை சர்வதேசமும் அங்கீகரிக்கவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

இரண்டாவதாக மத்திய குழு உறுப்பினரும் பொன்னம்மான் சகோதரனுமாகிய யோகி பேசுகையில் இந்த இயக்கம் சாதாரண புலிகள் இயக்கம் அல்லாமல் பலம்பொருந்திய பாட்டாளி மக்களின் அமைப்பாக இயங்கி வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது என்றார்.

இன்று நம் மத்தியில் 510 போராளிகளை இழந்துள்ளோம் என்றும் அவர் கூறினார்

மாணவர் இயக்கத்தைச் சேர்ந்த முரளி, தொழிலாளர் பிரதிநிதி மூர்த்தி ஆகியோரும் பேசினர்.


ஜே ஆர்.---
(1ம்-பக்கத் தொடர்ச்சி)

கிறது.

இருதரப்பார் செய்யும் வன்செயல்கள் குறித்தும் நாம் இரு சாராரையும் கண்டித்து வருகிறோம் எல்லோராலும் ஏற்கக்கூடிய ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கு உதவுமாறு நாம் இரு சாராரையும் வற்புறுத்தி வருகிறோம்.

1986 டிசம்பர் 19ஆம் திகதிய பிரேரணைகள் குறித்த இரு சாராரும் மிக விரிவாகப் பேச வேண்டும் என்பதே எமது நிலை

இரு சாராரும் மற்றத் தரப்புக்கு உரிய மதிப்பளித்து நடந்து கொள்ள வேண்டும் என்பதை நாம் எடுத்தறியுள்ளோம்.


யாழ்ப்பாணத்தில் உள்ள அநேக தமிழ் மக்கள் அப்பாவிகள் இலங்கைத் தமிழ் மக்கள் பாதிக்கப்படும் போது தமிழ் நாட்டு மக்கள் கவலை அடைவதை தடுக்க முடியாது. அவர்களுக்கு உதவ நினைப்பது தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சிகளைப்பிரதிபலிப்பதாகும்.

இலங்கையில் மோசமடைகின் நடவடிக்கைகள் ஆழமாகப் பரவி வருகின்றன அதனை இலங்கையால் கட்டுப்படுத்த முடியவில்லை; இலங்கையில் மோசமான நெருக்கடிலை தோற்றுவித்து வருகிறது என்றுகூறினார்.


தமிழ் மக்க....
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் கலந்துகொண்டனர்

நேற்று நடைபெற்ற பிரதான மே தினப் பேரணிகளில், இன விடுதலைக்கான எழுச்சிக் கோஷங்களை மக்கள் கோஷித்துச் சென்றனர். (அ)



வடபகுதி இடதுசாரிக் கட்சிகள், தொழிற்சங்கங்கள் வெகுஜன அமைப்புகள் இணைந்து நடத்திய ஐக்கிய மேதின ஊர்வலத்தில் ஒரு பகுதியினரை மேலே உள்ள படங்களில் காணலாம்.
(படம்: ஜெயம்)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15-ம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்ட திகதி 02-05-1987
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org